**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 126 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 8** |
| **Name** | : | **திரு. சந்திரமோகன்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **30.01.2024**

எதிரிகள்1,4 ஆஜர். எதிரிகள் 2,3 ஆஜரில்லை. 1,பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மதுரை, தெற்குவெளிவீதி, பூக்கார சந்து குடியிருந்து வருகிறேன். பொன்வேலன் என்ற பெயரில் சைக்கிள் கடை வைத்துள்ளேன். ஆஜர் 1,4 எதிரிகளைத் தெரியும். எனது அண்ணாச்சி சந்திரசேகரன் என்பவர் மகள் பொன்மலர் என்பவரை தூத்துக்குடி மாவட்டம், நாகலாபுரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் காமாட்சிபாண்டியன் என்பவருக்கு 04.11.2005 ம் வருடம் திருமணம் செய்து கொடுத்தோம். திருமணமனத்தின் போது 100 பவுன் நகை, 1 லட்சம் ரொக்கம், 2 ½ லட்சம் மதிப்புள்ள சில்வர் பாத்திரங்கள் சீர்வரிசையாகக் கொடுத்தோம். திருமணம் நடந்த சுமார் 1 ½ வருடத்திற்குள் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு மீண்டும் மீண்டும் மதுரைக்கு பணம் வாங்கி வரச்சொல்லி கொடுமைப்படுத்தினார். அதில் சண்டை வந்து வீட்டை

விட்டு வெளியேற்றியும் இருக்கிறார். நாங்கள் சமாதனப் பேச்சு நடத்திய்போது சரி இனிமேல் நல்லபடியாக வாழ்கிறோம் என்று அழைத்துச் சென்று மறுபடியும் மீண்டும் கொடுமைப்படுத்தி அதன் காரணமாக எனது அண்ணாச்சி மகள் பொன்மலர் என்பவர் பெங்களுரில் அவர்களுடைய வீட்டில் தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலை முயற்சி செய்தார். அது தெரியவந்து எனது அண்ணாச்சி பெங்களுர் சென்று அழைத்து வந்துவிட்டார். அதன்பிறகு எனது அண்ணாச்சி அவர்கள், dowry கேட்டு துன்புறுத்தியதாக மதுரையில் கோர்ட்டில் வழக்கு பதிவு செய்தார்கள். அதன் பிறகும் சமதானமாகப் பேசி அழைத்துச் சென்று மீண்டும் கொடுமைப்படுத்தியதால் மதுரைக்கு அண்ணாச்சி வீட்டிற்கே வந்துவிட்டார். வீட்டிற்கு வந்த பின்பும் காமாட்சிபாண்டியன் வீட்டிற்கு வந்து பிரச்சனை ஏற்படுத்தினார். தொடர்ந்து பிரச்சனை ஏற்படுத்தியதால் மிகவும் மோசமான மனநிலைக்கு ஆட்பட்டு 18.01.2010 ல் பழைய மகாலிபட்டி ரோட்டில் உள்ள எனது அண்ணாச்சியின் வீட்டில் வைத்து மண்ணெண்ணெய் உபயோக்கித்து தற்கொலை செய்து கொண்டார். நான் எனது கடையில் இருந்த போது எனக்கு தகவல் வந்து வீட்டிற்குச் சென்று பார்த்தேன். முழுவதும் எரிந்த நிலையில், வீட்டின் முன்புறம் உள்ள வலதுபக்கம் உள்ள அறையில் கிடந்தார். அதற்குப்பின் 19.01.2010 ம் தேதி RDO அவர்கள் விசாரணை மேற்கொண்டார்கள். 20.01.2010 ல் காவல்துறை ஆய்வாளர் முன் விசாரணை மேற்கொண்டது. அங்கு சென்று விபரங்களைக் கூறினோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி1 தரப்பில்) :**

நகலாபுரத்திற்கு நான் சென்றுள்ளேன். நகலாபுரத்திற்கும் மதுரைக்கும் இடையே சுமார் 65 கிமீ தூரம் இருக்கும். தூத்துக்குடி, மதுரை, திருநெல்வேலி, விருதுநகர் போன்ற இடங்களில் எல்லாம் அந்தெந்த ஊர்களில் எல்லாம் நாடார் மகாசன சங்கங்கள் உள்ளது என்றால் சரிதான்.

கல்யாணம் நடைபெற்றால் அதை அந்த சங்கத்தில் பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். காமாட்சிபாண்டியனும் பொன்மலருக்கும் நடந்த திருமணம் மதுரையில், மதுரை நாடார் உறவின்முறையில் பதிவு செய்யப்பட்டது. நான் பெங்களூர் சென்றதில்லை. காமாட்சிபாண்டியன் அந்நியம் தான். எங்கள் உறவினர் கிடையாது. கேஸ் நடந்ததாக சொல்லியுள்ளதில் அந்த கேஸ் நடத்துவதற்கு நான் உதவியாக இருந்தேனா என்றால் என்னிடம் ஆலோசனை கேட்டுக்கொள்வார்கள். நான் ஆலோசனை சொல்வேன். அதன்படி அவர்கள் கேட்டுக்கொள்வார்கள். பெங்களூரில் இருந்து பொன்மலரை அழைத்து வந்து மதுரை அப்பலோ மருத்துவமனையில் வைத்தியம் பார்த்தார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பொன்மலரின் தற்கொலை முயற்சிக்காக வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. எனது வீடு மதுரை தெற்குவெளி வீதியில் உள்ள பூக்கார சந்து ஆகும். அசா1 ன் வீடு பழையமகாலிபட்டி ரோடு ஆகும். பழையமகாலிபட்டி ரோடு என்பது தெற்குவெளிவீதியில் இருந்து பிரிந்து செல்கிறது என்றால் சரிதான். பழையமகாலிபட்டி ரோட்டில் வீடுகள், அலுவலகங்கள் அனைத்து நெருக்கமாக இருக்கும் என்றால் சரிதான். எனக்கு மகன் மகள் உள்ளார்கள். அவர்கள் அனைவரும் திருமணமாகி விட்டது. அவர்களுக்கு எங்கள் குல வழக்கப்படி நகை, சீர் வரிசைகள் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் என் மகனுக்கும் அவரது மாமனார் வீட்டில் இருந்து எங்கள் குல வழக்கப்படி நகை, சீர் வரிசைகள் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது மகளுக்கு பணம் எதுவும் சீராகக் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எனது மகனுக்கும் சீராக பணம் எதுவும் வாங்கவில்லை. பொன்மலர் மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டது பற்றி எந்த தேதியில் எத்தனை மணிக்கு தகவல் தெரியும் என்றால் சம்பவம் நடந்த அன்று காலை சுமார் 11.30 மணியளவில் நான் கடையில் இருந்த போது தொலைபேசி வாயிலாக எனக்கு தகவல் கிடைக்கப்பெற்றது. தகவல் கிடைத்த உடனே நான் எனது அண்ணன் அசா1 ன் வீட்டிற்குச் சென்றுவிட்டேன். எனது கடைக்கும்

அசா1 ன் வீட்டிற்கும் இடையே சுமார் ½ கிமீ தூரம் இருக்கும். நான் சைக்கிளிலில் சென்றேன். நான் அசா1 ன் வீட்டில் போலிசார் இருந்தார்களா என்று ஞாபகம் இல்லை. நான் அசா1 ன் வீட்டில் இருக்கும்போது அங்கு போலிசார் வந்தார்களா என்றால் போலிசார் இருந்தார்கள். சம்பவம் நடந்த அன்று என்னையோ என் அண்ணன் அசா1 ஐயோ போலிசார் விசாரிக்கவில்லை. அப்போது சம்பவம் நடந்த அறை, பக்கத்து அறைகள், இறந்த பொன்மலரின் உடைமைகளை போலிசார் பரிசோதித்துப் பார்த்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. போலிசார் விசாரணையின் போது, 18.01.2010 ம் தேதி இரவு என் அண்ணன் மகள் தங்கியிருக்கும் அறையைப் பார்த்தபோது அங்கு ஒரு பேப்பரில் இவ்வழக்கிற்கு தேவையானபடி ஆங்கிலத்தில் எழுதியிருந்த பேப்பரை நகல் எடுத்து அதை ஒப்பிட்டு பார்க்க பொன்மலர் எழுதிய 1 குயர் லாங் சைஸ் நோட்டையும் கனம் RDO அவர்களிடம் ஒப்புவித்தேன் " என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவத்தன்று திருமணத்திற்கு அருப்புக்கோட்டைக்கு காலையில் சென்றுவிட்டு மதியம் வந்துவிட்டேன். என்னுடன் என் அண்ணன் அசா1 ம் வந்திருந்தார். என் அண்ணன் அசா1 ம் நானும் கல்யாணம் முடிந்து அங்கிருந்து கிளம்பும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் கல்யாணம் முடியவில்லை. கடையைத் திறக்க 10 மணிக்கு கிளம்பிவிட்டேன். நான் சொன்னது போல் திருமணத்திற்கு நகையோ, பணமோ, சீர் வரிசைப் பொருட்களோ கொடுக்கப்படவில்லை என்றும் நான் சொன்னபடி எந்த துன்புறுத்தலும் செய்யவில்லை என்றாலும் பொன்மலரின் விருப்பத்திற்கு எதிராக திருமணம் செய்துவிட்டு, அவர் வாழ விருப்பம் இல்லாமல் இருந்தார் என்றும் அதனால் விவாகரத்து வழக்கு கொடுத்தும் மற்றும் வன்கொடுமை சட்டத்தின் கீழும் புகார் கொடுத்தும் ஜீவனாம்சம் பெறுவதற்கு நீதிமனறத்தில் உத்தரவு பெற்றார் என்றும் அதனால் அவருக்கு திருமணத்திற்கு முன்பிருந்தே மன உளைச்சல் இருந்தது என்றும் அவருக்கு தற்கொலை செய்து கொள்ளும் மன நிலை எப்போதும் இருந்தது என்றும்

எதிரிகளுக்கும் பொன்மலர் இறந்ததற்கான சூழ்நிலைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் பின்னிட்டு எதிரிகளைப் பழிவாங்கும் நோக்கில் நான், என் அண்ணன் ஆகியோர் கலந்து பேசி எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுத்து அசா1 க்கு ஆதரவாக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் 2 முதல் 4 தரப்பில்) :**

1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 126 / 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW : 9** |
| **Name** | **:** | திரு. பழனிவேல் |
| **Father's / Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **30.01.2024**

எதிரிகள்1,4 ஆஜர். எதிரிகள் 2,3 ஆஜரில்லை. 1,பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மதுரை, மேலஅனுப்பானடியில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ ஸ்டோரில் Sales man ஆக வேலை செய்கிறேன். இவ்வழக்கில் இறந்துபோன பொன்மலர் எனது உடன்பிறந்த சகோதரியின் மகள் ஆவார். 12.00 மணிக்கு எனக்கு போன் வந்தது. நான் எனது சகோதரியின் வீட்டிற்குப் போனேன். சுமார் 01.30 மணிக்கு AC வந்தார். வரைபடம் வரைந்து statement எழுதினார். 02.00 மணிக்கு நானும் அறிவானந்தம் என்பவரும் கையெழுத்து போட்டோம். அதில் அறிவானந்தம் முதல் கையெழுத்து போட்டார். நான் 2 வது கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த பார்வை மகஜர் அதசாஆ. 7 ஆகும்.** ஒரு மண்ணெண்ணெய் கேன் வெள்ளை நிற கேன் அதில் கொஞ்சம் மண்ணெண்ணெய் இருந்ததை

போலிசார் எடுத்தார்கள். அந்த அத்தாட்சியிலும் நான் 2 வதாக கையொப்பம் செய்தேன். **அந்த அத்தாட்சி அதசாஆ.8 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் கொஞ்சம் மண்ணெண்ணெய் உள்ள கேன் தான் அந்த வெள்ளை நிற மண்ணெண்ணெய் கேன் ஆகும். அந்த கேன் ஏற்கனவே அசாபொ1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி1 தரப்பில்) :</u>**

இறந்த பொன்மலர் எனது உடன் பிறந்த சகோதரியின் மகள் ஆவார். என்னுடன் கையொப்பம் செய்த அறிவானந்தம் என்பவர் இறந்த பொன்மலரின் ஒன்றுவிட்ட சித்தப்பா ஆவார். சம்பவ வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையே சுமார் 3 கிமீ தூரம் இருக்கும். எனது ஆபிஸ்க்கும் சம்பவ வீட்டிற்கும் இடையே சுமார் 3 கிமீ தூரம் இருக்கும். நான் என்று எத்தனை மணிக்கு கேள்விப்பட்டு பொன்மலர் வீட்டிற்குப் போனேன் என்றால் 18.01.2010 ம் தேதி 12.00 மணிக்கு சம்பவம் பற்றி கேள்விப்பட்டு போனேன். நான் அசா1 ன் வீட்டிற்குப் போகும் போது போலிசார் அங்கு இருந்தார்கள். எனக்கு கேஸ் அடுப்பு., மண்ணெண்ணெய் அடுப்பு, மண்ணெண்ணெய் அடுப்பில் உள்ள பல வித அடுப்புகள் ஆகியவற்றிற்கு வித்யாசம் தெரியும். அசாபொ1 கேன் அடுப்படியில் உள்ள மேடையில் இருந்து எடுக்கப்பட்டது. அந்த மேடைக்குப் பக்கத்தில் தான் பொன்மலரின் உடல் இருந்தது என்றால் சரிதான். மண்ணெண்ணெய் அடுப்பு இருந்ததா என்றால் திரி போட்டு எரிக்கும் மண்ணெண்ணெய் ஸ்டவ் இருந்தது. அந்த ஸ்டவ் மேடை மேல் இருந்ததா என்றால் மண்ணெண்ணெய் கேனிற்குப் பக்கத்தில் தான் அடுப்படி மேடையில் அந்த மண்ணெண்ணெய் ஸ்டவ் இருந்தது. அந்த மண்ணெண்ணெய் ஸ்டவ்வானது பம்ப் செய்யும் அடுப்பு இல்லை வெறும் திரி போட்டு எரிக்கும் வகையான அடுப்பு ஆகும். அந்த மண்ணெண்ணெய் அடுப்பில் மண்ணெண்ணெய் ஊற்ற வேண்டும் என்றால் அதில் மூடியைக் கழற்றி மண்ணெண்ணெய் ஊற்ற வேண்டும் அல்லது புனல்

வைத்து ஊற்றவேண்டும் என்றால் சரிதான். அந்த மண்ணெண்ணெய் அடுப்பை போலிசார் பார்த்தபோது அங்கு இருந்தது. புணல் எதுவும் இல்லை. அந்த மண்ணெண்ணெய் அடுப்பு என்ன நிலையில் இருந்தது என்று போலிசார் பார்த்தார்கள். அதை போலிசார் எடுத்துக்கொண்டு சென்றார்கள். அசா1ன் வீட்டில் கேஸ் அடுப்பு இருந்ததா என்றால் கேஸ் அடுப்பு தனியாக இருந்தது. மண்ணெண்ணெய் அடுப்பு இருந்த இடத்தில் கேஸ் அடுப்பு இருந்ததா என்றால் அது தனியாக இருந்தது. கேஸ் அடுப்பு இருந்தால் அதற்கு அடுப்பு, சிலிண்டர் ஆகியவை தனியாக இருக்கும் என்றால் சரிதான். அந்த கேஸ் அடுப்பை போலிசார் check பண்ணி பார்த்தார்கள். போலிசார் பார்த்தவைகளுக்கு எல்லாம் வரைபடம், plan ஆகியவற்றை தயார் செய்தார்கள். அதில் கேஸ் அடுப்பு, சிலிண்டர், மண்ணெண்ணெய் அடுப்பு ஆகியவை இருந்ததைப் பார்த்து அவை என்ன நிலையில் இருக்கிறது என்பதையும் எழுதிக்கொண்டார்கள். போலிசார் இந்த இடங்களை எல்லாம் பார்த்து எழுதிக்கொள்ளும் போது பொன்மலரின் பெற்றோர் அங்கு இருந்தார்கள். அசா1ன் வீட்டில் மொத்தம் எத்தனை ரூம்கள் இருந்தது என்றால் 3 ரூம் இருந்தது. அந்த 3 ரூமிற்குள்ளும் போய் போலிசார் தடயங்கள் இருக்கிறதா என்று பார்த்தார்களா என்றால் எல்லாவற்றையும் check பண்ணி பார்த்தார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை எங்கு வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் அசா1ன் வீட்டில் வைத்து விசாரித்து நான் சொன்னதை எழுதிக்கொண்டு அதில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதன் பிறகு என்னை போலிசார் விசாரிக்கவில்லை. நான் சொன்னது போல் எதுவும் கிடையாது என்றும் ஆவணங்கள் மற்றும் பொருட்கள் எல்லாம் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு அங்கு வைத்து தான் நான் கையொப்பம் செய்தேன் என்றும் அசா1ன் வீட்டின் உண்மையான நிலைகள், தடயங்கள் மறைக்கப்பட்டு, பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும் அசா1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் 2 முதல்4 தரப்பில்) :</u>**

1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை